2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்குச் சிறப்புக் கவன ஈர்ப்பு ஒன்றை எடுத்துக்கொள்ளவிருக்கிறேன். (குறுக்கீடு) அதைச் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இதற்கெல்லாம் தனியாக அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) அதையெல்லாம் கொடுத்திருக்கிறீர்கள். நான் அதை பதில் வரும்போது எடுத்துக்கொள்வேன். (குறுக்கீடு) பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்வேன். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) நான் அறிக்கை கேட்டிருக்கிறேன். (குறுக்கீடு) அறிக்கை வந்தவுடன் எடுத்துக்கொள்ளப்படும். இதையெல்லாம் திடீரென்று எழுப்ப முடியாது. ஏற்கெனவே உங்களுடைய கட்சி உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்ளப்படும், உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்ளப்படும், உட்காருங்கள்.

முற்பகல் 11–40

மின் வெட்டு சம்பந்தமாக விவசாயிகள், சிறு. குறு தொழில் முனைவோர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து எடுக்கவிருக்கிறேன். (குறுக்கீடுகள்) அதையெல்லாம் பதில் வந்தவுடனே எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள்; பதில் வந்தவுடனே எடுத்துக் கொள்கிறேன்; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இது சரியல்ல; இது முறையல்ல. (குறுக்கீடுகள்) உங்களுடைய உறுப்பினர்கள் ஏற்கெனவே கேட்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் புகைப்படம் ஒன்றைக் காட்டினர்.)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் அணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

என்னுடைய அனுமதியில்லாமல் அவையில் இதுபோன்று புகைப்படத்தைக் காட்டுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் என்னுடைய அனுமதியில்லாமல் இதுபோன்று புகைப்படத்தை அவைக்குக் கொண்டு வந்து காட்டுவது, சட்ட விதிகளுக்கு, நம்முடைய சட்டமன்ற மரபுகளுக்கு ஏற்றதல்ல; சரியானதல்ல. அதை எடுத்து உள்ளே வையுங்கள். இல்லையென்றால், நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) முறையான பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இதுபோன்று புகைப்படத்தைக் காட்டுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) நான் உங்களை வெளியேற்ற வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லையென்றால், நான் உடனடியாக உங்களை வெளியேற்ற வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்)

என்னுடைய அனுமதியில்லாமல் இதுபோன்று புகைப்படத்தை அவையில் காட்டுவது சரியல்ல. (குறுக்கீடுகள்) முறையில்லாமல், என்னுடைய அனுமதியில்லாமல், அவைக்கு இதுபோன்று புகைப்படங்களைக் கொண்டுவந்து காட்டுவது முறையல்ல. இது அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற செயலாக இருக்கின்ற காரணத்தினால், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்களை அவையிலிருந்து வெளியேற்றும்படி அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் புகைப்படத்தைக் காட்டி கோஷமிட்டனர்.)

அனுமதியில்லாமல் அவைக்குள் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) அவைக் காவலர்கள் அவர்களை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற காரணத்தினால், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை அவையிலிருந்து வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய அனுமதி இல்லாமல் அவர்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். நான் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுக்கப் போகிறேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் என்னுடைய அனுமதியில்லாமல், இதுபோன்ற காரியங்களில் ஈடுபட்டதை, அவைக்குக் குந்தகம் விளைவித்ததை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இனிமேல் என்னுடைய அனுமதி பெறாமல் யாரும், எந்தப் பொருளையும் இதுபோன்று அவையிலே காட்டக் கூடாது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நான் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுக்கவேண்டும்; உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை. இப்போதுதான் பதில்கள் எல்லாம் வந்துகொண்டிருக்கின்றன. ஒவ்வொன்றாக நான் எடுத்துக் கொண்டிருக்கிறேன். இப்போது ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளவிருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

மின்வெட்டால் விவசாயிகள், சிறு, குறு தொழில் முனைவோர் மற்றும் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மின்வெட்டு சம்பந்தமாக விவசாயிகள், சிறு, குறு தொழில்முனைவோர்கள் மற்றும் பொது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. இரா. அண்ணாதுரை, திரு. ஏ. லாசர் ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. பி.எல். சுந்தரம், திரு. ந. நஞ்சப்பன் ஆகியோரும் பேரவை விதி 55–ன்கீழ்